**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.144/2023

பெயர் : மெகருன்னிசா (DW2) (Cross )

த/க/பெ. :

தேதி :13.10.2025

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி என்னுடைய 2 வது கணவர். முதல் கணவர் இறந்துவிட்டார். முதல் கணவருக்கு பிறந்த குழந்தை உள்ளது. வாதிக்கும் எனக்கும் குழந்தை இல்லை. வாதி ஏற்கனவே திருமணம் ஆனவர் ஆவார். ஒரு திருமண ஆன விபரம் மட்டும் எனக்கு தெரியும், அவர் மற்றொரு திருமணமும் செய்துள்ளார், அதை என்னிடம் மறைத்துவிட்டார். ஆனால் என்னிடம் ஒரு திருமணம் என்று தான் சொன்னார். ஏற்கனவே ஆன திருமணத்தில் குழந்தை இருப்பதாக சொன்னாரா என்றால் சொன்னார். 2006 ல் செட்டில்மெண்ட் எழுதி வைத்த சொத்து வாதியின் பூர்வீக சொத்து. வாதி நான் தான செட்டில்மெண்ட் வாங்கிய வீட்டில் இருக்கிறாரா என்றால் இல்லை, வெளியே வேறு பெண்ணுடன் இருக்கிறார். என் முதல் கணவரின் மகனுடன் தான் நான் தங்கியுள்ளேன் என்றால் சரிதான். வாதி வீட்டைவிட்டு போய் 6 வருடம் இருக்கும் என்றால் சரிதான், ஆனால் அடிக்கடி வந்து என்னை தெந்தரவு செய்வார். தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்த பிறகு ஆவணங்கள் அனைத்தும் எனது பெயரில் தான் உள்ளது. என் முதல் கணவருக்கு பிறந்த மகன் பெயரில் வீட்டை மாற்றியுள்ளேனா என்றால் இல்லை. என் மகன் பெயரில் வீட்டை மாற்றி எழுதுவதற்காக வாதியை வீட்டை விட்டு அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல.